2000 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 150, திரு. செ. மதிவாணன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.*

150—

ஆற்றின் குறுக்கே மேம்பாலம்

***18217—திரு. செ. மதிவாணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சரபாக்கம் தொகுதியில் கிளியாநகர் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) இப்பணியை வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் நபார்டு ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 4-ல் செயல்படுத்த அரசாணை நிலை எண் 292, நெடுஞ்சாலைத் துறை, நாள் 30-11-1998-ல் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. செ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா பழைய வினா. இந்தப் பணி இப்போது நடைபெறுகிறது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி விடைபெற்றுக்கொள்கிறேன்.*

திரு. இரா. தாமரைக்கனி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தாமரைக்கனி, உங்களுக்கு என்ன கேள்வி இதிலே? (குறுக்கீடு) திரு. இரா. தாமரைக்கனி.*

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டு வங்கி உதவியுடன் இந்த ஆண்டு, 2000-2001 ஆம் ஆண்டில் எத்தனை மேம்பாலங்களைக் கட்டுவதற்கு அரசு உத்தேசம் செய்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நபார்டு வங்கியின் மூலமாக 54 பாலங்களும், மறுபடியும் 106 பாலங்களும் எடுத்துக்கொள்ளப்பட்டு இப்போது கட்டப்பட்டு வருகின்றன. 2000-2001 ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப்படுபவை குறித்து இனிமேல்தான் நபார்டு வங்கிக்கு நம்முடைய வேண்டுகோளை அனுப்ப இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 151, திரு. பி. வெங்கடசாமி, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

151—

RAILWAY OVERBRIDGE

***26773—THIRU B. VENKATASAMY:**

Will the Hon. the Minister for Highways be pleased to state—

(*a*) Is there any proposal with the Government to construct overbridges to Bangalore--Chennai NH-7 in place of the Railway crossing near Natrampalli, Pachakuppam, Ambur etc; and

(*b*) If so, when ?

மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னைக்கும் பெங்களூருக்கும் இடையே தேசிய நெடுஞ்சாலை 46-ல் கி.மீ. 73/6-ல் பச்சகுப்பம் அருகே ஒரு இரயில்வே மேம்பாலம் அமைப்பது கி.மீ.49/6-ல் உள்ள பாலத்தை மறு கட்டுமானம் செய்வது ஆகிய பணிகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை தவிர, ஆம்பூர் மற்றும் நாட்ராம்பள்ளி ஆகிய ஊர்களில் இரயில்வே மேம்பாலங்கள் அமைக்கும் உத்தேசம் இல்லை.